SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு

இலங்கைத் தேயிலைச் சபை

பதவியிட வெற்றிடங்கள் (ஒப்பந்த அடிப்படை)

இலங்கையில் தேயிலை கைத்தொழிலை ஒழுங்குபடுத்துதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் விற்பனையை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்காக செயற்படும் பிரதான அரச நிறுவனமான இலங்கை தேயிலை சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் குழாமில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களை ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்காக தகைமைகளையும், திறமைகளையும் மற்றும் ஆர்வத்தையும் கொண்ட இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. முகாமைத்துவ உதவியாளர் (கணக்கு வைப்பாளர்) (தரம் III) - (MA 1-1) - வெற்றிடங்கள் 01

பணி விவரக்குறிப்பு :

இலங்கை தேயிலை சபையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் தேயிலை சபையின் கணக்கீட்டு பதிவேடுகளை தயாரித்தல், இற்றைப்படுத்துதல் மற்றும் பேணுதல் தொடர்பான கடமைகளை நிறைவேற்றுதல்.

தகுதிகள் மற்றும் அனுபவம் :

வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு :

க.பொ.த (உ/த) பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் மற்றும் சிங்களம்/தமிழ் பாடங்கள் உட்பட 04 திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

கணக்கு வைப்பு/கணக்கீடு தொடர்பான அறிவு மேலதிக தகைமையாக கருதப்படும்.

தெரிவு செய்யும் முறை:- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம். எழுத்துப் பரீட்சைக்கான பாடங்கள், புள்ளிகள் வழங்கும் முறை மற்றும் பரீட்சை மொழி

பாடம்	நேரம் மற்றும் புள்ளிகள்	பரீட்சை மொழி
• மொழித் திறன	(புள்ளிகள்-100) (மணி - 1 ½)	ஆங்கிலம் அல்லது சிங்கள மொழி அறிவு பரீட்சிக்கப்படும்.
• உளச்சார்புப் பரீட்சை	(புள்ளிகள்-100) (நிமிடம் - 45)	சிங்களம் அல்லது தமிழ் மொழி
• பொது அறிவு	(புள்ளிகள்-100) (மணி - 01)	சிங்களம் அல்லது தமிழ் மொழி
• கணினித் திறன்	(புள்ளிகள்-100) (மணி - 01)	ஆங்கில மொழியில் மாத்திரம்

பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்க்கும் மொழியினை விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளும், ஒட்டுமொத்த பரீட்சையிலும் சராசரியாக 50% புள்ளிகளும் பெற்றிருக்க வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம் :

MA 1-1 : ரூ. 46,220/- 10 x ரூ. 540/- 7 x ரூ. 630/- 4 x ரூ. 890/- 20 x ரூ. 1,190/- ரூ. 83,390/- (மாதாந்தம்)

முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 01/2025 அட்டவணை II இன் படி ஆரம்ப மாதாந்த சம்பளப் படிநிலை ரூ. 43,312/- மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

வயது எல்லை :

18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

ஒப்பந்தக் காலம் :

01 வருடம் (12 மாதங்கள்)

2. சாரதி (தரம் III) – (PL-3) - வெற்றிடங்கள் 02

பணி விவரக்குறிப்பு :

இலங்கை தேயிலை சபையின் போக்குவரத்துத் தேவைகளை வழங்குவது தொடர்பான வாகனங்களைச் செலுத்துதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான அரச கடமைகளை நிறைவேற்றுதல்.

தகுதிகள் மற்றும் அனுபவம் :

வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு :

(அ) கணிதம், சிங்களம்/தமிழ் உட்பட ஆறு பாடங்களுடன் க.பொ.த. (சா.த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(ஆ) கனரக வாகனங்களைச் செலுத்துவதற்கான செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கனரக வாகனங்களைச் செலுத்தியதில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட திருப்திகரமான அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

தெரிவு செய்யும் முறை :

செய்முறைப் பரீட்சையின் பின்னர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம்.

சம்பள அளவுத்திட்டம் :

MA 1-1 : ரூ. 43,280/- 10 x ரூ. 490/- 10 x ரூ. 540/- 10 x ரூ. 590/- 12 x ரூ. 630/- ரூ. 67,040/- (மாதாந்தம்)

முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 01/2025 அட்டவணை II இன் படி ஆரம்ப மாதாந்த சம்பளப் படிநிலை ரூ. 40,834/- மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

வயது எல்லை :

18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

ஒப்பந்தக் காலம் :

01 வருடம் (12 மாதங்கள்)

ஏனைய/பொது நன்மைகள் :

- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரரின் சம்பளத்தில் 10% ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அறவிடப்படுவதுடன் சபை அதற்காக 15% பங்களிப்புச் செய்யும்.
- சபை மேலும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு அவரது சம்பளத்தில் 3% பங்களிப்புச் செய்யும்.

விண்ணப்பித்தல் :

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரின் சிபாரிசுடன் சமர்ப்பிக்க வேண்டும். இந்த அலுவலகத்திலோ அல்லது **http://www.srilankateaboard.lk** என்ற இணையத்தளத்திலோ பெற்றுக்கொண்ட குறித்த மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன், பிறப்புச் சான்றிதழ் மற்றும் கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2026 நவம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்

இலங்கைத் தேயிலைச் சபை

574, காலி வீதி,

கொழும்பு 03.

SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB